# தேசிகன் பஞ்சகம்.



திருவோணத் திருநாளில் அவதரித்தவரே ,

திருமாலின் நக்ஷத்திரத்தில் அவதரித்ததால் ;

வேங்கடவனவதாரமோ அன்றி திருமணியோ ,

வேங்கடகவியே நீர்யாரென்று எமக்குக்கூறும் ! 1.

ஊன்றுகோலாய் இருந்து பரமனடி சேர்வதற்கே ,

மூன்று ரகசியங்களின் சாரத்தை தந்தவைகளை ;

பயின்று நற்கதியடைந்த முக்தர்களைப் போன்று ,

முயன்று மற்றவரும் அதன் பயன்பெற செய்தீரே ! 2.

பொங்கக் கொண்டுவந்த அரிசிதனில் அன்றுகிடந்த ,

தங்கமணிகளைப் புழுவென வீதியில் வீசியபின்பு ;

திருமகளைமனமுறுக வேண்டியோர் பிரம்மசாரிக்கு ,

பெருமழையென தங்கத்தைக் கொட்டச் செய்தவரே ! 3.

பரமனையேப் பாடப்பெற்ற இவ்வாயினால் வேறொரு ,

மன்னனைப் பாடேனென்று உறுதியுடனிருந்து அன்று ;

கிடைத்த பெருவாழ்வுதனையும் துச்சமென்று மதித்து

படைத்த திருமால் ஒருவனையேப் பாடபெற்றவரே ! 4.

ஆப்புள் சிக்கித்தவிக்கும் ஒருமந்தியின் நிலைபோன்று ,

தூப்புல் என்ற தலமதில் அவதரித்தப் பெருந்தகையே ;

கலியின் கொடுமையில் இருந்து மாந்தர்களை இன்று ,

பலியாகாமல் காத்து அருள்புரியவே நீரும் வந்தீரோ ! 5.